2011 ஜனவரி 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே என்னிடத்தில் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தியிருக்கிறார்கள். ஏற்கெனவே அரசு அதை பரிசீலனை செய்தது. ஆனால் Home Science–ஐ அறிவியல் subject ஆக நான் ஏற்றுக்கொள்வதற்கில்லை. Home Science is a different subject altogether. அதை நீங்கள் Science என்று எடுத்துக்கொண்டீர்கள் என்றால், Science என்றால் அதில் Chemistry, Physics, Biology என்கின்ற பிரிவுகள் இருக்கின்றன. அதிலே ஒரு பிரிவிலே ஏதாவது ஒரு major–ல் படித்திருந்தால்தான் நம்முடைய பள்ளிகளிலே உள்ள பாடத் திட்டத்திற்கு, +2–வில் எடுத்துக்கொண்டீர்கள் என்றால், அல்லது 10th–ஐ எடுத்துக்கொண்டீர்கள் என்றால் அதில் அறிவியல் பாடத் திட்டம் இருக்கிறது. அறிவியல் பாடத் திட்டத்திற்கு என்னென்ன subjects படித்திருக்க வேண்டுமோ அவர்கள்தான் teacher ஆக வரமுடியும். Home Science படித்தவர்கள் எல்லாம் அறிவியல் பட்டதாரிகள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது அவ்வளவு பொருத்தமுடையதாக இல்லை. எனவே, சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் வலியுறுத்திய கோரிக்கையானது அரசின் மட்டத்திலே பரிசீலிக்கப்பட்டு இப்போது ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையில் இல்லை.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீடிக்கப்படுகிறது.

வினா வரிசை எண் 28, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

28—

தகவல் தொழில்நுட்பப் பூங்கா

***108414—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 12

(அ) சேலம் மாவட்டம், சேலத்தில் அறிவிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பப் பூங்கா பணிகளை விரைந்து துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஜாகீர் அம்மாபாளையம் கிராமத்தில் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலம் 164.26 ஏக்கரில் அமைக்கப்பட்டு, சென்ற வருடம் நமது முதல்வர் அவர்களது திருக்கரத்தால் அடிக்கல் நாட்டப்பட்டு தற்போது உட்கட்டமைப்புப் பணிகள் ரூ.10 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. இன்னும் 3, 4 மாதங்களில் பணிகள் முடிவடைந்துவிடும் எனத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.*

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது சட்டப் பேரவையில் கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி போன்ற வானூர்தி வசதிகள் கொண்ட மிகப்பெரு நகரங்களில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, சேலத்திலே அந்தப் பணி துவங்கப்பட்டுள்ளதாகவும், கட்டுமானப் பணிகள் நடந்துகொண்டு வருவதாகவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்திருக்கிறார்கள். இதை வரவேற்கிறேன். இந்தக் கட்டுமானப் பணிகள் 2009 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. இப்பொழுது வேலை நடந்துகொண்டிருக்கிறதா? 3 மாதங்களில் பணிகள் முடிந்துவிடும் என்று சொல்கிறார்கள். ஆனால், அதற்குமேலே கால அவகாசம் எடுத்துக்கொள்ளக்கூடும் என்ற நிலையையும் சொல்கிறார்கள். ஆனகாரணத்தினாலே, எந்த மாதத்தில் அல்லது எப்பொழுது பணிகள் முடிக்கப்பட்டு இது செயல்படத் துவங்கும் என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன். அதேநேரத்தில், செயல்படத் துவங்கும்பொழுது வெளிநாடுகளுடன் அல்லது பல்வேறு நிறுவனங்களுடன் இதைச் செயல்படுத்துவதற்கான ஒப்பந்தங்கள் ஏதேனும்*

2011 ஜனவரி 12]

செய்யப்பட்டுள்ளதா? அப்படி ஒப்பந்தங்கள் செய்யப்பட்டிருந்தால் அதில் எவ்வளவுபேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்ற தகவலையும் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களை அமைக்கும்போது ஒன்று, உட்கட்டமைப்பு வசதிகள். இரண்டாவது, கட்டட வசதிகள் செய்து தரப்படும். தற்போது சேலத்தில் முதற்கட்டமாக உட்கட்டமைப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. சென்ற வருடம் தகவல் தொழில்நுட்பத் துறையில் ஒரு சிறிய தொய்வு (recession) உலக அளவில் நடந்ததால் படிப்படியாக கட்டட அமைப்புகளை நாங்கள் விரிவுபடுத்திக் கொண்டிருக்கின்றோம். திருச்சியில் மிகச்சிறப்பாக நடந்து முடிவடைந்து, இன்று பல முதலீட்டாளர்கள் வந்துகொண்டிருக்கின்றார்கள். அதேபோல, மதுரையிலும், திருநெல்வேலி மாவட்டத்திலும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அடுத்தகட்டமாக வெகுவிரைவில் சேலத்திலும், 50 ஆயிரம் சதுர அடி உள்ள கட்டட வசதிகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். மேலும், சேலத்தில் மட்டும் V.E.E. Technology, D.B. Professionals ஆகிய இரு பெரும் நிறுவனங்கள் நிலம் கேட்டுள்ளார்கள். அவர்களும் முதலீடு செய்வார்கள் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தகவல் தொழில்நுட்பப் பூங்கா வருவதினாலே ஒவ்வோர் இடத்திலும் எவ்வளவுபேருக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது? அதேபோல, ஒவ்வோர் இடத்திலும் அரசுக்கு எந்த அளவுக்கு வருவாய் வர இருக்கும் என்ற திட்ட மதிப்பீடுகள் எல்லாம் தங்களிடத்திலே இருக்கும். ஆனகாரணத்தினாலே, வேலைவாய்ப்பு பெறக்கூடியவர்களுடைய எண்ணிக்கை, ஒவ்வோர் இடத்திலும் அரசுக்கு எவ்வளவு தொகை இலாபம் ஈட்டும் என்ற தகவலை அறிய விரும்புகிறேன். இந்த வேலைவாய்ப்பு வழங்குகிற நேரத்தில் அந்தந்த மாவட்டத்தைச் சார்ந்த, அந்தப் பகுதியைச்

சார்ந்தவர்களுக்கு, வேலைவாய்ப்பில், கல்வித் தகுதி உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். அப்பொழுதுதான் அது பயனுள்ளதாக இருக்குமென்ற காரணத்தினாலே இதை அரசுக்கு வேண்டுகோளாக வைக்கிறேன். அந்தந்த மாவட்டப் பகுதிகளைச் சார்ந்த, கல்வித் தகுதி உள்ளவர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்க வேண்டும். அப்படி வழங்குகிற நேரத்திலே இதுவரை இல்லாமல் இருந்தாலுங்கூட, அங்கேயுள்ள பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மாணவர்களில் அந்தக் கல்வித் தகுதி உள்ளவர்களுக்கு, தனியார் நிறுவனங்களிலும் இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்துவதற்காக, இடஒதுக்கீட்டு முறையில் பணி நியமனம் வழங்கப்படுமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே நமது முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்கள் மட்டும்தான் இரண்டாம் நிலை நகரங்களான திருநெல்வேலி, திருச்சி, மதுரை, சேலம், வேலூர், ஓசூர் போன்ற இடங்களில் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களை நிறுவியுள்ளார்கள். இதற்குமட்டும் சுமார் 650 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இதன் விளைவாக கடந்த 2008–2009 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் மட்டும் software exports ரூ.445.34 கோடி இருந்தது. தற்போது, சென்ற 2009–2010 ஆம் ஆண்டு 908.70 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். பணி நியமனத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். அது தமிழ்நாட்டை மட்டும் சார்ந்த ஒரு விவரமல்ல. மத்திய அரசு அளவில் பேசப்பட்டு அதற்கான ஒரு நல்ல முடிவு எடுக்கப்பட வேண்டும். குறிப்பாக, private sector–ல் இடஒதுக்கீடு குறித்து இங்கு முதலீடு செய்ய வருபவர்களிடம் கேட்டுக்கொள்வது, முடிந்தவரை அங்குள்ள மாணவர்களுக்கு வேலைவாய்ப்பைத் தாருங்கள் என்றுதான் நாங்கள் கேட்டுக்கொண்டிருக்கின்றோம். அவர்களும் அதற்கு ஏற்றவாறு நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.